செய்தி வெளியீடு எண். 87 நாள். 08.02.2018

**கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் 01.07.2015 அன்றுள்ளவாறு 34 காலியிடங்கள் உள்ளன. இந்தப் பணிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் பத்தாம் வகுப்பு படித்திருக்க வேண்டும் (Appeared for SSLC Examination), கால்நடைகளை கையாளவும், மிதி வண்டி ஓட்டவும் தெரிந்திருக்க வேண்டும்.

காலிப் பணியிடங்களில் பெண்கள், ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் விகிதாசார அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர். அனைத்து பதவிக்கும் விண்ணப்பதாரர்களின் குறைந்தபட்ச வயது வரம்பு 01.07.2015 அன்றுள்ளபடி குறைந்தபட்சம் 18 முதல் அதிகபட்சம் 30 வரையாகும். ஆதிதிராவிடர், பழங்குடியினர், அருந்ததியர் வகுப்பினருக்கு வயது வரம்பு 35 ஆகும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம் உட்பட) வயது வரம்பு 32 ஆகும், பொது பிரிவினருக்கு வயது வரம்பு 30 ஆகும்,

கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்களை www.tiruvallur.tn.nic.in என்ற இணையதளத்தில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்த நபர்கள் மட்டுமே இங்கு விண்ணப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை, மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, எண்.179, ஜவஹர்லால் நேரு ரோடு, கால்நடை மருத்துவமனை வளாகம், திருவள்ளூர் 602 001 என்ற முகவரிக்கு வருகிற 22.02.2018 மாலை 5.45 மணிக்குள் கிடைக்கும் வகையில் தபால் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது நேரிலும் ஒப்படைக்கலாம்.

கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கு நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படுவர். நேர்காணலில் அதிக மதிப்பெண் பெறும் விண்ணப்பதாரர்கள் மாவட்ட இனச்சுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர். நேர்காணல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மாவட்ட அளவில் நடைபெறும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு: செய்தி, மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**